நல்ல நிலமாகு நண்பா

# விதைகள்

VOL-2 ISSUE-15 DECEMBER 2021

"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்;
நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்;
கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்;
அவர் நாமம் அதிசயமானவர்,
ஆலோசனைக்கர்த்தா,
வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா,
சமாதானப்பிரபு என்னப்படும்"
(ஏசாயா 9:6)



வெளிச்சமுள்ள
இடத்தில்
அலங்கார
விளக்காய்
இருப்பதை விட





இருளுள்ள இடத்தில்
மெழுகுவர்த்தியாய்
இருக்கவே
விரும்புகிறேன்

# உள்ளடக்கம்










வரலாற்றை இழந்த சத்திரம் • 4
பிறப்பால் இயேசு எந்த ஜாதி? • 8
கிருபை பெற்றவர்களுக்கும் பாடு உண்டு • 11
நட்சத்திரம் இல்லாமல் கிறிஸ்மஸ் உண்டா? • 16
ஒருவருக்கொருவர் மகிழ்வை பகிர்வதே கிறிஸ்மஸ் • 18
உன்னில் இடமுண்டோ? • 24
ஆடை என்பது பாவத்தின் மூடல் • 28



**NALLA NILAMAKU NANBA**

16/76 Vettukattuvilai,
Kannanoor -629158,
Kanyakumari District, Tamilnadu, India
Phone +91 94869 54577

+91 86680 47378
/நல்ல-நிலமாகு-நண்பா-101820927950003

**மலர்க்குழு உறுப்பினர்கள்**

S. மெர்லின் (ஆசிரியர்)
K.S. பிரசன்னா மெர்லின் (மேலாண்மை)
Dr. அரவிந்த் ஜெயக்குமார் ம.
ஹில்டா பாக்கியராஜ்
J. ஜாண் டேனியேல்
S. ஜாக்குலின் ஷைன்
J. ஜவஹர்

Design by : **DANNIES** DESIGNS

# சத்திரம் சிதைந்தது! மாடடை மாளிகையானது!!

**ஆ. ஜெனில் தாஸ்**
இறையியல் மாணவர், UTC பெங்களூர்

பெருந்தொற்று என்னும் இருளில், அமைதியற்ற நிலையில் அமைதியின் அரசராம், உலகின் பேரொளியாம் இயேசுவை கொண்டாடும் நோக்கில் மானுட உலகு கிறிஸ்து பிறப்பு தினத்திற்கு ஆயத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. திருமறையின் பழைய ஏற்பாட்டுக் காலம் தொடங்கி, பல காலகட்டங்களில் சமூக கட்டமைப்பு, ஆட்சி, அதிகாரம், மேலாதிக்கம் போன்றவற்றால் அடிமை வாழ்வில் தவித்து வந்த மக்கள் அத்தகைய சூழலிலிருந்து தங்களை விடுவிக்கும் மேசியாவை எதிர்பார்த்து காத்திருந்தனர். அதே நிலை இயேசு கிறிஸ்துவின் காலத்திலும் தொடர்ந்தது. தங்களுக்குரிய மேசியா தோன்றுவார், தற்கால ஆட்சியாளர்களை அகற்றி, பெரும்பான்மை பலத்தோடு ஆட்சி அதிகாரத்தை பிடிப்பார், ஆயுதமேந்திப் போராடுவார், அரண்மனையில் பிறப்பார் என்பன போன்ற எதிர்பார்ப்பில் இருந்த மக்களுக்கு அமைதிக்கான அரசரின் பிறப்பின் நிகழ்வே அவர்களின் எதிர்பார்ப்பு முற்றிலும் தவறானது என்பதை சுட்டிக்காட்டும் வண்ணத்தில் அமைந்தது. இதுவரை மக்கள் கண்ட ஆட்சிமாற்றம் பணபலத்தையும், படைபலத்தையும் அடிப்படையாய் கொண்டிருந்தது. ஆனால் இந்த முறை இயேசு என்னும் மேசியாவின் வருகை ஒரு குறிப்பிட்ட கூட்டத்திற்குரியதாய் இராமல் அனைத்துலகின் விடுதலையை மையப்படுத்தி






அமைந்திருந்தது. எனவே, அவர் பிறப்பால் மானுட உலகில் ஏற்ப்படப்போகும் புது வாழ்விற்கான அடிப்படை மாற்றம் சத்திரம் சிதைந்து, மாடடை மாளிகையானதிலிருந்து தொடங்குகிறது.

**சத்திரம் சரித்திரத்தை இழந்தது:**

கிரேக்கத்தில் "Kataluma" என்கிற சொல் 'சத்திரம்' (Inn) என்பதை குறிக்கிறது, அதன் பொருள் "இளைப்பாறும் இடம்" (A Place to Relax). இயேசு கிறிஸ்து பிறந்த காலகட்டம் நெருக்கடிகள் மிகுந்து காணப்பட்டது, அரசு ஆணையின்படி குடிமதிப்பு எழுதப்பட வேண்டிய கட்டாயத்தில் மக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு பயணம் மேற்கொண்டனர். வழக்கத்திற்கு மாறான மக்களின் திடீர் பயணமும், மக்களின் அவசர நிலையும் சத்திரங்களில் இடங்கள் இல்லாத நிலையை ஏற்படுத்தியது. இன்றைய தங்கும் விடுதியை மனதில் நிறுத்தி சிந்திக்கும்போது, சத்திரம் என்பது மனிதர்கள் தங்குவதற்கான பல வசதிகளை கொண்டிருந்தது. பலவகை அலங்காரப் பொருள்கள், நறுமணத் திரவியங்கள், ஆடம்பரமும், வசதியுமான அமைப்போடு, பாதுகாப்பாளர் கண்காணிப்பின் கீழ் செயல்படும் இடமாய் இருந்தது. வழிப்போக்கர்களின் பார்வையில் படும்படி நகரத்தின் மையத்தில் அமையப் பெற்றிருந்தன சத்திரங்கள். பணபலம், அதிகார அரவணைப்பு, பகை, பொறாமை, விரோதம், வஞ்சகம், போட்டி நிறைந்த மனநிலை கொண்ட மனிதர்கள் ஒன்றிணைந்த இடமாக அது காட்சி தந்தது. இப்படி சொல்ல காரணம், நிறைமாத கர்ப்பிணியை கண்டும் மனிதநேயத்தை வெளிப்படுத்தாத, மனச்சான்றற்ற மனிதர்கள் அங்கு நிறைந்திருந்தனர். வெளிப்புற தூய்மையுடன் சத்திரம் காட்சி தந்தது, ஆனால் உள்ளான தூய்மை வாழ்வில் குறை கொண்டிருந்தது. இயற்கை ரம்மியத்துடன் பார்வையாளர்களை கவர்ந்திழுக்கும் ஆற்றல் அதற்கு இருந்தது, அதே சமயம் படைப்பாளராம் மானுட மகனை ஏற்றுக்கொள்ளும் மனநிலை சத்திரத்திற்கு இல்லாதிருந்தது. சுற்றுபுறம் முழுமையும், விளக்கின் வெளிச்சத்தில் பிரகாசித்தது ஆனால் அங்கு இருந்தவர்களிடம் உலகில் பிரகாசிக்க போகும் பேரொளியாம் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும் மனது இல்லை.

இத்தகைய சுயநல குணநலன்களால் சரித்திரத்தில் இடம் பிடிக்க வேண்டிய அந்த சத்திரம் தன்னைத்தானே சிதைத்துக் கொண்டது.

**மாடடை மாளிகையானது:**

சத்திரத்திற்கு முற்றிலும் எதிர்மறையான தன்மையைக் கொண்டிருந்தது மாடடை. மற்றவர்களின் பார்வையில் படாதபடி ஒதுங்கி அமைந்திருந்தது. பிறரை கவர்ந்திழுக்கும் நறுமணமும், அலங்காரமும், ஆடம்பரமும் இதனிடம் இல்லாதிருந்தது. சத்திரத்தை போன்று மையத்தில் அல்ல கடை நிலையில் அமையப் பெற்றிருந்தது. வாசலில் நின்று மலர்கொத்து தந்து, வரவேற்க அங்கு நபர்கள் இல்லை. சுற்றுபுறத்தை முழுமையாய் பிரகாசிப்பிக்கும் ஒளி அங்கு இல்லை, முற்றிலும் இருள் மையம் கொண்டிருந்தது. அதேசமயம், உலகின் பாவ இருளை போக்க வந்த கிறிஸ்துவாம் பேரொளியை ஏற்றுக்கொள்ளும் மனது அதற்கு இருந்தது. தூய்மையான காற்றோ, தாராள வசதியோ அங்கில்லை, ஆனால் மனுக்குலத்திற்கு ஜீவ சுவாசத்தை தந்தவர் வசிக்க அங்கு இடம் இருந்தது. சமூகத்தால் கைவிடப்பட்டோர், அநாதைகள், ஆதரவற்றோர், துன்பத்தில் இருப்போர், நிலையற்று அலைந்து திரிந்தோரை தூய்மையான உள்ளத்தால் அரவணைக்கும் பக்குவம் முன்னணைக்கு தாராளமாகவே இருந்தது. விலங்குகளின் மூச்சுக்காற்று பாலன் இயேசுவுக்கு தாலாட்டு பாட ஆவல் கொண்டிருந்தன. இத்தகைய தன்மைகளைக் கொண்டிருந்த மாடடை குடில், மானுட மகனை வரவேற்க தன்னை எல்லா நிலைகளிலும் ஆயத்தப்படுத்தி



வைத்திருந்தது.
வெளித்தோற்றத்திற்கு ஒளி மங்கி காட்சி தந்தாலும் பிறர் வாழ்வில் ஒளி ஏற்றும் தியாக சிந்தனை மாடடைக்கு தாராளம் இருந்தது.

**அர்த்தமுடைய கிறிஸ்து பிறப்பை கொண்டாடுவோம் வாரீர்!!**

இக்கால கிறிஸ்துபிறப்பு கொண்டாட்டங்கள் இயேசு கிறிஸ்துவின் மானுட வருகையின் நோக்கத்தை பிரதிபலிப்பதாக இல்லாமல், வீண் ஆடம்பரத்தையும், அலங்காரங்களையும் மையப்படுத்தி அமையப் பெற்றிருக்கிறது. பல ஆயிரம் செலவு செய்து மின்விளக்கு அலங்காரங்கள், பல வடிவ குடில்கள், பட்டாசுகள், கேளிக்கைகள், பரிசுகள் என எளிமையை விட்டுவிட்டு பொருளாதார பெருக்கத்தை காட்டுவதாக மாறிவிட்டன. இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் நோக்கம், ஆதிக்க சமூகத்தில் வாழ்விற்காக தவித்துக் கொண்டிருந்தவர்கள் வாழ்வு பெறவும், சமூக கட்டமைப்பின் அடிமைத்தன சங்கிலியில் சிக்கி தவித்தவர்கள் விடுதலை பெறுவதையே மையப்படுத்தி இருந்தது. இவ்வருட கிறிஸ்துபிறப்பு கொண்டாட்டங்கள் கிறிஸ்துவின் வருகையின் உண்மை சாரம்சத்தை வெளிப்படுத்துவதாய் அமையட்டும். ஆதரவற்ற நிலையில் இருப்போரை ஆதரிப்போம், சமூக கட்டமைப்பால் பாதிக்கப்பட்டோருடன் உடன் நிற்போம். இவ்வருட ஆடம்பர கொண்டாட்டத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்தும் முன்பு, “இயேசு பிறந்த தீவனத் தொட்டியும் அவருக்கு சொந்தமல்ல, அவர் மரித்தபோது அடக்கம் செய்யப்பட்ட கல்லறையும் அவருக்கு சொந்தமானது அல்ல” என்பதை சிந்தையில் கொள்வோம். ஆகவே, எளிமையாய் தோன்றி, எளிமையுடன் வாழ்ந்து, எளியோருடன் இணைந்து பயணித்த கிறிஸ்துவின் தன்மையையும், சிந்தையையும் தரித்துக் கொள்வோம், அர்த்தமுடைய கிறிஸ்து பிறப்பை எதிர்கொள்வோம்! பிறர் வாழ்வில் ஒளியேற்றும் தீபங்களாகுவோம்!!






# இயேசு பிறப்பால் எந்த ஜாதி

J. ஜாண் டேனியேல்
கொற்றியோடு

இயேசுகிறிஸ்துவின் மானுடப் பிறப்பு, தேவ அன்பின் எல்லையற்ற விரிவை நமக்கு உணர்த்துகிறது. யோவான் நற்செய்தி 3ம் அதிகாரம் 16ம் வசனத்தில் எழுதப்பட்டுள்ள 'இவ்வளவாய் அன்புகூர்ந்தார்' என்னும் வேத வாசகத்தின் நீள, அகல, ஆழ, உயரங்களை அறிந்துகொள்ள நிச்சயமாக ஒரு வாழ்நாள் போதாது. அது நித்தியத்தில்தான் சாத்தியமாகும்.

தேவ அன்பின் எல்லையற்ற விரிவைப் பல வழிகளில் நாம் விளக்கலாம். எனினும் மத்தேயு நற்செய்தி முதலாம் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள இயேசுவின் வம்ச அட்டவணையில் வருகின்ற சில தகவல்களில் மறைந்திருக்கும் அற்புதமான சில உண்மைகளை ஆண்டவரின் ஆவியரின் உதவியால் புரிந்துகொள்ள முயலுவோம்.

**சாதீய எல்லைகளைக் கடந்த தேவ அன்பு:**

இயேசுவானவர் யூதா கோத்திரத்தில் பிறப்பார் என்பது முன்னறிவிக்கப்பட்ட ஒன்றாகும். அவர் யூதராகப் பிறந்தாலும் அவரது வம்ச வரலாற்றில் யூதரல்லாத புற இனத்தாரின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. மத்தேயு நற்செய்தி முதலாம் அதிகாரம் 5-ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு பெண்மணிகளான ராகாப், ரூத் ஆகியோர் யூதரல்லாதவராவர்களாவர். ராகாப் கானானியப் பெண்மணி; ரூத் மோவாபியப் பெண்மணி.

ஆண்டவரின் ஆவியரின் நடத்துதலோடு எழுதப்பட்ட சத்திய



வேதம், இந்த இரண்டு பெண்மணிகளின் பெயர்களை இங்கு தெளிவாகக் குறிப்பிடக் காரணம், தேவனின் அன்பு சாதீய எல்லைகளைத் தாண்டிய ஒன்று என்பதை உணர்த்துகிறது.

படைப்பின்போது கடவுள் மனிதனை சாதி சாதியாகப் படைக்கவில்லை. ஆதாமையும் ஏவாளையுமே அவர் படைத்தார். அவர்களிடமிருந்துதான் இந்த உலகம் முழுவதும் மனிதர்கள் பெருகினர். உலக மக்கள் அனைவருமே ஒரே ஆதாமிலிருந்து தோன்றியிருக்க எங்கிருந்து வந்தன சாதிகள்?

ஆதி மனிதனைப் படைத்த தேவன், மனிதர்களின் உடலமைப்பின் படைப்பில் சாதி சார்ந்த எந்த பாகுபாட்டையும் வைக்கவில்லையே. மனிதன் தேவ சாயலில் படைக்கப்பட்டவன். தேவன் தமது குமாரனை மனித சாயலிலேயே இந்த மண்ணுக்கு அனுப்பினார். அனைத்து மனிதர்களின் உடலும் ஒரே வடிவமைப்பில்தான் இருக்கிறது. எல்லா மனிதர்களுக்கும் தலை முதலிலும் கால்கள் அடியிலும்தான் இருக்கின்றன. எல்லா மனிதர்களும் கண்களால்தான் பார்க்கிறார்கள்; காதுகளால்தான் கேட்கிறார்கள்; கால்களால்தான் நடக்கிறார்கள்; கைகளால்தான் வேலை செய்கிறார்கள். அனைவரும் உண்பது வாய்வழிதான்; கழிவுகளை வெளியேற்றுவது ஆசன வழியாய்த்தான். இவற்றில் எங்கே சாதியைக் கண்டீர்கள்?

இயேசுவின் பிறப்பு எப்படி அறிவிக்கப்பட்டது? 'இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி' என்றல்லவா? அவருக்குப் பிள்ளைகளாகும் அதிகாரம் யாருக்குக் கொடுக்கப்பட்டது? 'அவருடைய நாமத்தின் பேரில் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனைபேர்களுக்கும்' அல்லவா? அப்படியானால் கிறிஸ்தவனுக்கு ஏது சாதி?

'எனக்குப் பிறன் யார்?' என்ற கேள்விக்கு இயேசு கொடுத்த பதில் சாதி வெறியர்களுக்கு அவர் கொடுத்த சம்மட்டி அடியாகும். தமது மூன்றரை ஆண்டு ஊழியக் காலத்தில் எப்போதெல்லாம் யூதரல்லாதோரை பாராட்ட



வேண்டுமோ அப்போதெல்லாம் இயேசு அவர்களைத் தூக்கி வைத்துப் பாராட்டியிருக்கிறார். இன்னும் சொல்லப்போனால் யூதர்களல்லாதோரை உதாரணம் காட்டி யூதருக்கு உபதேசம் சொல்லியிருக்கிறார் இயேசு. நமதாண்டவர் விரும்பாத ஒன்றை நாம் பின்பற்றினால் எப்படி நாம் அவரைப் பின்பற்றுவோராவோம்? கிறிஸ்தவனுக்கு சாதி கிடையாது. சாதி பார்க்கிறவன் கிறிஸ்தவன் அல்ல.

சாதிக்கொரு தேவாலயம் என்பது கிறிஸ்தவர்களை வெட்கத்துக்குட்படுத்தும் செயலாகும். பரலோகத்துக்கு நாம் செல்லும்போது சாதிவாரியாகவா நம்மை உட்கார வைக்கப் போகிறார்கள்? இயேசு கூறிய



பிரதான கற்பனையின் ஒரு கூறான, 'உன்னிடத்தில் நீ அன்பாயிருப்பதுபோல பிறனிடத்தில் அன்பாயிரு' என்னும் ராஜரிகக் கட்டளையை உண்மையாய்க் கடைப்பிடிப்போமானால் சாதீயச் சுவடுகள் என்றைக்கோ உடைந்து சிதறியிருக்குமே?

கிறிஸ்தவ ஊழியர்கள் எவரது உள்ளத்திலேனும் சாதீயச் சிந்தனையின் சுவடுகள் இருக்குமாயின், அது முற்றுமாக மறைந்து ஒழியும்வரை உங்கள் ஊழியத்தை நிறுத்தி வைத்துக்கொள்வது உங்களுக்கு நல்லது. காலம் காலமாய் இரத்தம் சிந்துதலுக்கு இந்த தேசத்தில் காரணமாக இருக்கின்ற சாதீயக் கொடுமைக்கு நாம் துணை போக வேண்டாம். சாதியின் பெயரால் மக்களை இழிவுபடுத்துகின்ற செயலை இயேசுவின் பெயரைச் சொல்லுகின்ற எவரும் செய்ய வேண்டாம்.

அதற்காக உடனே அனைவரும் ஓடிச் சென்று சாதி மறுப்புத் திருமணம் செய்து கொள்ளுங்கள் என்று நான் சொல்லவில்லை. முதலாவது, அனைவருமே ஆண்டவரின் பிள்ளைகள்தாம் என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். சாதி சார்ந்த சிந்தனை உங்கள் உள்ளத்தில் இருக்குமாயின் அது முற்றிலுமாய் துடைத்து எறியப்படும்படி ஆண்டவரிடம் வேண்டுங்கள். அது முற்றிலுமாய் இதயத்திலிருந்து அகற்றப்படும்போது மற்றவை எல்லாம் நேராகிவிடும்.

# கிருபை பெற்றவர்

**Rev.Prakash Nayagam**
*CSI Church Kamarajapuram*

"அவள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான்."
லூக்கா. 1 : 28

'கிருபை' கிறிஸ்தவர்களுக்கு மிகவும் ஆறுதலளிக்கிற சொல். கிறிஸ்தவர்கள் ஜெபங்களிலும், ஆவிக்குரிய பேச்சுகளிலும் விரும்பி பயன்படுத்தும் வார்த்தையாகும். 'கிருபை' என்றாலே 'கடவுளிடமிருந்து மனிதருக்கு கிடைக்கும் பரிசு' (லூக். 1:28; எபே. 1:5).

மரியாளுக்கு தேவதூதன் 'கிருபை பெற்றவளே, வாழ்க' என்று வாழ்த்துகிறார் என்றால் அது ஆண்டவரிடத்திலிருந்து பெறுதற்கரிய பரிசு பெற்றவளே, வாழ்க, என்று வாழ்த்துவதாகும். வேறு எவருக்கும் இது போன்ற நேரடி வாழ்த்து கிடைக்கவில்லை. ஆனால் கடவுளிடத்திலிருந்து



மரியாள் பெற்றுக் கொண்ட இந்தக் கிருபை எனும் பரிசு அவர்களுக்கு கஷ்டமே இல்லாத வாழ்க்கையை கொடுக்கவில்லை.

சொல்லப்போனால் மற்றவர்களை விட அதிகமான கஷ்டத்தில்தான் மரியாள் வாழ்ந்தார்கள். கடவுளின் பரிசாகிய கிருபை அந்தக் கஷ்டங்களிலே தான் செயல்பட்டது. அந்தக் கஷ்டங்களை எதிர்கொள்ள கிருபையே அவர்களுக்கு உதவி செய்தது. இதையே தேவதூதன் லூக்.1:35. "உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்" என்றார். மரியாள் என்னென்ன கஷ்டங்களைச் சவாலோடு சந்தித்தார்கள் என்பதையும் அந்தச் சவால் நிறைந்த கஷ்டங்களிலே கிருபை எப்படி செயலாற்றியது என்பதைத் தியானிப்போம்.

### 1. அவமானம் என்னும் சவால் நிறைந்த கஷ்டம்.

மத்தேயு 1 : 18,19

அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில் அவர்கள் கூடிவருமுன்னே அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது. அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாய் இருந்து அவளை அவமானப்படுத்த மனதில்லாமல் இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான்.

மரியாள் சந்தித்த இந்தச் சவால் மிகவும் கடினமானது.

மத். 1 : 19 -ல் யோசேப்பு அவமானப்படுத்த மனதில்லாமல் என்று கூறுவதில் இருந்து எவ்வளவு அவமானத்தை மரியாள்






சகித்திருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. மனவியல் நிபுணர்களின் கூற்றுப்படி, பொதுவாக மனிதர்கள் தங்கள் வாழ்க்கை முறை இப்படித்தான் இருக்க வேண்டும் என்று ஒரு வரையறை அமைத்துக் கொள்வார்களாம்.

அந்த வரையறைக்கேற்ப வாழும் அவர்கள் வாழ்க்கை முறையில் திடீரென ஏற்படும் மாற்றமே அவமானம் என்று எண்ணத்தோன்றும். (உம்:) வீட்டின் முன்நின்று கொண்டு விரோதம் காரணமாக சில தகாத வார்த்தைகளை பேசும் போது நிகழக்கூடாத சம்பவம் வீட்டில் நடந்து விடுகிறது. "ச்சே இப்படியாகிவிட்டதே" என்று அந்த மாற்றத்தையே எண்ணி வருந்துவது. பின்னர் அதுவே வாழ்க்கையில் அவமானம் ஏற்பட்டுவிட்டதாக எண்ணி சாவு தான் வழியென்று விபரீதமாக முடிவெடுத்து விடுவார்கள்.

மனிதர் என்று இல்லாமல் மிருகங்களும் தங்கள் வாழ்க்கை முறையில் ஏற்படும் மாற்றங்களைச் சகிக்க முடியாமல் அதை அவமானம் என்று கருதி உயிர்விடுவதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். உதாரணமாக ஒரு எறும்புக்கு மிக முக்கியமானது மோப்ப சக்தி. ஒரு எறும்பு மோப்ப சக்தி இழந்துவிட்டால் அந்த மாற்றத்தைத் தாங்க முடியாமல் இறந்துவிடும்.

அதேபோல யானைக்குக் காதுகளை அசைத்துக் கொண்டே இருப்பது முக்கியம். அப்படி அசைக்க முடியாவிட்டால் இறந்து விடும்.

சுறா மீனுக்கு நீந்திக்கொண்டே இருக்க வேண்டும். இந்த வாழ்க்கை முறையில் மாற்றம் ஏற்பட்டால் சகிக்க முடியாமல் இறந்து விடும். இப்படி பிற உயிரினங்களுக்கும் வாழ்க்கையில் ஏற்படும் திடீர் மாற்றங்கள் அவமானம் என்று எண்ணும்படி செய்து இவ்வளவு பாதிப்புக்களை ஏற்படுத்தி மரணத்தை வருவித்து விடுகிறது.

மரியாளுக்கு ஏற்பட்ட அவமானத்தில் கிருபை மட்டும் தாங்கியிருக்கவில்லையென்றால் அந்த மாற்றத்தைத் தாங்க முடியாமல் மரித்து போயிருப்பார். ஏனென்றால் சமுதாயத்தில் சிறந்து இருப்பவர் மரியாள். இந்த மாற்றத்தைச் சவாலோடு சந்திக்கவே எலிசபெத் வீட்டிற்கு போகிறார்.

லூக்.1 : 39-56

அந்நாட்களில் மரியாள் எழுந்து மலை நாட்டிலே யூதாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குத் தீவிரமாய்ப் போய் ஏறக்குறைய மூன்று மாதம் அவளுடனே இருந்து தன் வீட்டிற்கு திரும்பிப் போனார். இந்த மூன்றுமாத காலம் கிருபையே இந்த மாற்றத்தை சந்திக்க உதவி செய்தது.

சமுதாய ஏளனத்திற்குப் பயந்திருந்த மரியாளைக் கிருபையே மீண்டும் வெளியே உலாவ வைத்தது.

அவமானங்களைச் சந்திக்கும் போது ஆண்டவர் கிருபை என்னோடு இருந்திருந்தால் அவமானம் ஏற்பட்டு இருக்காது என்று நினைத்திருப்போம்.

ஆனால் மரியாளின் வாழ்க்கையிலிருந்து நாம் தெரிந்து கொள்ளும் உண்மை, ஆண்டவர் கிருபை அவமானங்களையும் சந்திக்க பெலன் தருகிறது என்பதுதான். கிருபையின் செயல்பாட்டை உணர்ந்து ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம்.

### 2. அதிர்ச்சி என்னும் சவால் நிறைந்த கஷ்டம்

மரியாள் சந்தித்த அதிர்ச்சி எனும் சவாலை மத். 2:12-15 - ல் வாசிக்கலாம். தெரியாத இடத்திற்குப் பதற்றத்தோடு இரவோடு இரவாக புறப்பட்டுப் போகிறார்கள். மத். 2:14

அதுவும் அவர்களுக்குக் கொஞ்சமும் இஷ்டமில்லாத அவர்கள் முன்னோர் கசப்பை அனுபவித்த எகிப்திற்குப் போகிறார்கள். இவைகள் பதட்டமாய் நடைப்பெற்றன. பதட்டத்தோடு சில காரியங்களை செய்யும்போது மனிதரை அதிகம் தாக்குவது 'தலைவலி.' அந்த தலைவலிகளிலே Migraine என்றொரு தலைவலி இருக்கிறது. ஒருவர் கடுமையாக வேலை செய்து முடித்தபிறகு இது வரும்.

இரத்த ஓட்டத்தில் ஏற்படும் மாறுதலே இந்தத் தலைவலியைக் கொண்டு வருகிறது. (இது எப்படி வருகிறது என்றால் வலியை உணர்த்துகிற நரம்புகள் மூளையில் போய் முடிகிறது) பதட்டத்தாடு வேலை செய்து முடிந்ததும் இரத்த ஓட்டம் குறைவாகிறது. அதனால் மூளைக்கு போகிற இரத்த ஓட்டம் குறைபடுகிறது.

சரீரத்தை இயங்க வைக்கும் ஆக்ஸிஜனை எடுத்து போகும் இரத்த ஓட்டம் குறைபடுவதால் தலைவலி வருகிறது.

தலைவலி வருவதும் ஒரு கிருபையாக இருப்பதாக மருத்துவர்கள் கூறுகின்றனர். Migraine தலைவலி வரவில்லை என்றால் மூளைக்கு இரத்த ஓட்டம் அறவே தடைப்பட்டு, மரணத்தை வருவித்துவிடும்.



மத். 2:14 - ல் அவசர அவசரமாக இரவிலே எகிப்திற்கு பயணப்பட்டதால் நிச்சயமாக Migraine தலைவலி வந்திருக்கும் அதையும் கிருபையின் பலத்தினாலேயே சகித்தார்கள். அது மாத்திரமல்ல எகிப்திலே எவ்வளவு நாள் ஒளித்திருக்க வேண்டுமென்று தெரியாது. மத். 2:15-ல் 'ஏரோதின் மரண பரியந்தம்' என்று ஒரு காலகட்டத்தை வாசிக்கிறோம்.

ஏரோது எப்போது மரணமடைவான் என்பது தெரியாத நிலையில் இவைகளை எல்லாம் சவாலோடு எதிர்கொள்ள மரியாளுக்கு உதவியதெல்லாம் கிருபை தான். ஆண்டவர் அளிக்கிற கிருபை என்பது அதிர்ச்சிகளைத் தாங்கத் தருகிற பலம் என்பதை மரியாளின் வாழ்க்கை தெளிவுபடுத்துகிறது.

பல அதிர்ச்சிகளைத் தாங்குகிறோம், தாங்கியிருக்கிறோம் என்றால் அது நமது மனோதிடம் என்று சொல்லக்கூடாது. கிருபையே நம்மை தாங்கியது என்று நினைவில் கொண்டிருக்க வேண்டும். பவுல் அப்போஸ்தலர் இதை அழகாக 1கொரி. 15:10- ல் "ஆகிலும் நான் இருக்கிறது தேவ கிருபையினாலே இருக்கிறேன், அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாய் இருக்கவில்லை, அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய் பிரயாசப்பட்டேன். ஆகிலும் நான் அல்ல என்னுடனே இருக்கிற தேவ கிருபையே அப்படிச் செய்தது."

மரியாளைப் போல கிருபையின் பெலத்தினால் நாம் எவ்வளவு அதிர்ச்சிகளையும் சந்திக்க முடியும்.

ஆகவே தைரியமாக இருப்போம் ஏசா. 55:3- ல் "தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்."

இங்கேயும் நிச்சயமான கிருபை என்பது தாவீதுக்கு பல சோதனைகளையும், வேதனைகளையும் சந்திக்க கொடுக்கப்பட்ட பலத்தை குறிக்கிறது.

**முடிவுரை:**

தேவகிருபையைக் குறித்த நமது சிந்தனையெல்லாம் அதிகமாக 'அதிர்ஷ்டம்' என்ற கோணத்தில் தான் இருக்கிறது.

ஆனால் மரியாள் பவுல் ஆகியோரின் வாழ்க்கையின் அடிப்படையில் பார்க்கும்போது அவர்கள் வாழ்க்கையில் கிருபை செயல்பட்ட விதத்தைப் பார்க்கும்போது அது நம்மைத் தாங்கும் பலம் (Sustaining strength) எனலாம்.






# நட்சத்திரமும் மூன்று அறிஞர்களும்

மத் 2:1-12

V. ஜெயஸ்டார்லின்
உதவி திருப்பணியாளர், ஈஞ்சக்கோடு CSI

இயேசு கிறிஸ்துவின் பிறப்பை அறிவிக்கும் விதமாக விண்ணில் ஒரு நட்சத்திரம் தோன்றியது (மத் 2:2) -ல் படிக்கிறோம். இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் முதல் அடையாளம் நட்சத்திரம் ஆகும். இது "பெத்லகேமின் விண்மீன்" என்றும், "ஆண்டவரின் விண்மீன்" என்றும் சொல்லப்பட்டது, கிறிஸ்துவின் பிறப்பை அறிவிக்கும் விதமாகவும், கிறிஸ்து இயேசுவை வரவேற்கும் விதமாகவும், கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின் அழைப்பு மணியாகவும் மகிழ்ச்சியின் அடையாளமாகவும் விளங்கும்

இந்த நட்சத்திரத்தை “மீயொளிர் விண்மீன்” என்றும் “வால்வெளி வியாழன்” என்றும் சொல்லுவார்கள். இந்த நட்சத்திரம் அன்பை போதிக்க வந்த இயேசு கிறிஸ்துவின் பிறப்பை அறிவிக்கின்றது. கிறிஸ்து பிறப்பை அறிவிக்க வந்த நட்சத்திரம் “அபூர்வ நட்சத்திரம்” என்றும் “அதிசய நட்சத்திரம” என்றும் சொல்லப்படுகிறது அதிசய நட்சத்திரத்தை பின் தொடர்ந்து மூன்று கீழ் திசை அறிஞர்கள் நெடுந்தூரம் பயணம் செய்து கிறிஸ்து பிறந்த இடமானா தாவீதின் ஊராகிய பெத்லேகேமில் வந்து மாட்டுத்தொழுவத்தில் பிறந்த இயேசுவை தரிசித்தார்கள். மூன்று அறிஞர்களும் இயேசுவுக்கு சில பொருட்களை காணிக்கையாகக் கொடுத்தார்கள். இந்த பொருட்களை இயேசுவுக்கு காணிக்கையாக படைத்ததற்கான நோக்கத்தை நாம் அறிவோம்.

**பொன்:**

விலையுயர்ந்த தங்கம் அல்லது பொன் அந்த காலத்தில் அரசர்களிடம் மட்டுமே அதிகம் காணப்பட்டது. தங்க கிரீடம் மற்றும் தங்கத்தால் செய்த ஆபரணங்களை அரசர்கள் அணிந்திருப்பார்கள். இயேசு கிறிஸ்து சாதாரண ஒரு மனிதன் அல்ல அரசர்களுக்கெல்லாம் உயர்ந்த அரசர் என்பதை உணர்த்துவதற்காக தங்கத்தை காணிக்கையாக படைத்தார்கள்.

**தூபம்:**

தூபம் என்பது சாம்பிராணியைக் குறிக்கும். மக்கள் இறைவனை ஆராதிக்கும் போது தூபம் காட்டுகின்ற பழக்கம் இருந்தது. இன்றும் சிலர் தொழுகையில் பயன்படுத்துகின்றனர். இயேசு குழந்தை ஆராதனைக்குரியவர், உலக மக்கள் எல்லாம் அவருடைய புகழை சொல்லி ஆராதிக்க வேண்டும் என்பதன் அடையாளமாக தூபம் (சாம்பிராணி) என்ற காணிக்கையை படைத்தார்கள்.

**வெள்ளைப்போளம்:**

இதுவும் ஒரு வகையான வாசனை மிகுந்த பொருள். பாலஸ்தீனத்தில் பொதுவாக இறந்தவர்களை அடக்கம் பண்ணும் போது அவர்களின் உடலில் இந்த வாசனை மிகுந்த திரவியத்தை தடவும் பழக்கம் இருந்தது.

பிறந்த குழந்தைக்கு ஏன் இந்த வாசனப் பொருளை காணிக்கையாக படைத்தார்கள்?. பின் நாட்களில் இயேசு கிறிஸ்துவும் மக்களுக்காக மரிக்க போகிறார் என்பதை அறிஞர்கள் தீர்க்கதரிசனமாக அறிந்திருந்தார்கள். அதனால்தான் குழந்தை இயேசுவுக்கு வெள்ளைபோளத்தை காணிக்கையாக படைத்தார்கள். அறிஞர்கள் இயேசுவுக்கு படைத்த மூன்று பொருட்களுமே அர்த்தம் உள்ளவைகள் என புரிந்து கொள்வோம். நாமும் அர்த்தம் நிறைந்த பரிசுகளை பிறருக்கு வழங்குவோம்.

# கிறிஸ்து பிறப்பு: ஒரு மீட்பின் காலம்

# CHRISTMAS: A SEASON OF REDEMPTION

**Rev. Dr. David Joseph Raj**
*Asst. Professor, Dept. of History of Christianity*
*Gurukul Lutheran Theological College, Chennai*



மத்தேயு 1:21 "அவர் ஒரு மகனைப் பெற்றெடுப்பார். அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர். ஏனெனில் அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்" என்றார். உலக மக்களிடம் அன்புகூர்ந்து, அவர்களை மீட்கும்படியாக, தம் ஒரே மகனை மீட்பின் கருவியாக தந்து, உலகத்தில் நிலவும் பாவம், இறைவன் விரும்பாத வாழ்வு, இயற்கையைப் பாழ்படுத்துதல், சுயம் சார்ந்த தன்மைகள் இவைகளைக் களைவதற்கு கிறிஸ்து உலகத்தில் அவதரித்தார்.

லூக்கா 2:10,11- இல் "இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்." "குழந்தையைத் துணிகளில் சுற்றித் தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம்" என்றார். மீட்பு என்ற சொல், ஆங்கிலத்தில் "Redemption" என்றும், கிரேக்க மொழியில் "அகோராசோ" (agorazo) என்றும் வழங்கப்படும். இதனுடைய பொருள் வியாபார சந்தையில், பொருட்களை வாங்குவது. இதற்கு உரிய விலைக் கொடுத்தால் மட்டும் வாங்க முடியும் (to purchase in the Market place). பழைய நாட்களில் அடிமை வியாபரம் இருந்த சூழலில் ஒரு அடிமையை மீட்பதற்கு அல்லது வாங்குவதற்கு, அதற்குரிய நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் செலுத்த வேண்டும் (to me act of buying a slave). இயேசு

கிறிஸ்துவும், உலக மக்களை மீட்பதற்கு மீட்பராகத், இரட்சகராக, இறை குமாரனாக தரப்பட்டார், அதற்காக அவருடைய வாழ்வு, திரு இரத்தம் விலைக்கிரயமாக செலுத்தப்பட்டது. எபேசியர் 1:7-இல் இந்த மாபெரும் மீட்பின் செயலைத்தான் அவருடைய பிறப்பின் நாளில் நினைவு கூரவும், அதனுடைய உண்மையான இறையியல் தகவுகளை வாழ்க்கையில் வெளிப்படுத்தவும், உலக மீட்பர், இரட்சகர் என்று மக்களுக்கு எடுத்து சொல்லவும், கிறிஸ்து பிறப்பு மீட்பின் செய்தி வலியுறுத்துகிறது.

### 1. காரிருளிலிருந்து மீட்பு

*(Redemtion from Darkness)*

ஏசாயா 9:2-இல் "காரிருளில் நடந்துவந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்; சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர்மேல் சுடர் ஒளி உதித்துள்ளது." கிறிஸ்துவின் பிறப்புக்கு முன், பழைய ஏற்பாட்டு காலத்தில் இறைவாக்கினர்கள், மற்றும் அரசர்களால், மக்கள் வாழும் சூழலில், அனேக கஷ்டங்கள் மற்றும் கடினங்களை மக்கள் நாள்தோறும் சந்தித்தனர். கஷ்டங்கள், கடினங்கள் இங்கு காரிருளுக்கு உருவகப்படுத்தி சொல்லப்பட்டுள்ளது. இயற்கை பேரிடர்கள், தொற்று, கொள்ளை நோய்கள், நாடுகளுக்கிடையே போர் சூழல்கள் ஆகியன மக்கள் அமைதியை இழக்க செய்தது. இந்த அசாதாரண சூழல் மாறி சுதந்திரமாக, தங்கள் கடமைகளைச் செய்ய ஒரு மீட்பர்/விடுவிப்பாளார்/இரட்சகரை மக்கள் எதிர்நோக்கினர். ஏசா. 9:4- இல் "மிதியான் நாட்டுக்குச் செய்தது போல அவர்களுக்குச் சுமையாக இருந்த நுகத்தை நீர் உடைத்தெறிந்தீர்; அவர்கள் தோளைப் புண்ணாக்கிய தடியைத் தகர்த்துப் போட்டீர்; அவர்களை ஒடுக்குவோரின் கொடுங்கோலை ஒடித்தெறிந்தீர்." ஏசாயா 9:6,7-இல், அமைதியின் அரசர் நீதியோடும் நேர்மையோடும் ஆட்சி புரிந்து மக்களின் காரிருள்



அனுபவங்களை மாற்றுவார் என்கிறார் ஏசாயா தீர்க்கர்.

Covid-19 பெருந்தொற்று, 2019-ஆம் ஆண்டிலிருந்து, இன்று வரை உலக மக்களைக் காரிருளுக்குள் இருப்பது போன்ற கடினத்தை ஏற்படுத்தியுள்ளது, குழந்தைகள், இளையோர் கல்வி பாதிப்பு, மனதளவில் உடலளவில் சோர்பு, விரக்தி, குடும்பங்களில் பொருளாதார சிக்கல்கள், வேலைவாயப்பின்மை, தங்களுக்கு அருமையானவர்களை இழந்து, ஆறாதத்துயரில் இருப்பவர்கள் ஏராளம். ஒட்டு மொத்த உலகமும் காரிருளில் இருப்பது போன்ற உணர்வு. இச்சூழலில், இயற்கை பேரிடர்கள், நாடுகளுக்கு இடையே போர் சூழல்கள், பாலியியல் வன் கொடுமைகள், பொருளாதார வீழ்ச்சி, வாங்கும் திறன் குறைந்து பொருட்களின் விலையேற்றம் ஆகியன மக்களை அதிக சோர்வடையச் செய்கிறது. இதன் மத்தியில் கிறிஸ்துவின் பிறப்பு காரிருளை மாற்றி மீட்பின் ஒளியை நம்பிக்கை கீற்றுகளாக நமக்கு தருகிறது.

### 2. மகிழ்ச்சி கொள்ளும் மீட்பு

*(Redemption Brings Happiness)*

லூக்கா 1:47- இல் "ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப் படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது."

இறை மீட்பின் திரு திட்டத்திற்கு மரியாள், வானதூதர் வழியாக அழைப்பை பெற்றார்.






லூக்கா 1:35 - இல் "தூய ஆவி உம்மீது வரும், உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும், ஆதலால் உம்மிடம் பிறக்கப்போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும்." இவ்வாக்குரை மரியாளுக்கும் அவருடைய உறவினர் எலிசபெத் சகரியா குடும்பத்திற்கும், பெருமகிழ்ச்சியை அளித்தது செய்தியை ஏற்படுத்தியது. மீட்பின் திரு திட்டத்தினால் அதில் உடன்படுவோருக்கும், பங்கேற்பவர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சி உண்டு. பாவத்தில் வீழ்ந்த மனுக்குலம் மீட்கப்படும்போது, இறை சமூகத்தில் மிகுந்த மகிழ்ச்சி ஏற்படுகிறது. லூக்கா 15:7- இல் "அதுபோலவே மனம் மாறத் தேவையில்லாத் தொண்ணூற்றொன்பது நேர்மையாளர்களைக் குறித்து உண்டாகும் மகிழ்ச்சியை விட, மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்து விண்ணுலகில் மிகுதியான மகிழ்ச்சி உண்டாகும் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்."

மகிழ்ச்சியை இழந்து வாழும் மக்கள் அதிகமாகி கொண்டிருக்கிற சூழலில், இறைவன் விரும்பாத வாழ்க்கை மக்கள் மகிழ்ச்சியைத் தொலைந்து போக செய்கிறது. கிறிஸ்துவின் பிறப்பின் நற்செய்தி, மீட்பின் செய்தியாக, மகிழ்ச்சியைக் கொடுக்கும் மாபெரும் நற்செய்தியாகும். லூக்கா 2:10- இல் "வானதூதர் அவர்களிடம்,அஞ்சாதீர்கள், இதோ, எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்," என்றார்.

### 3. அன்பினால் அனுபவமாகும் மீட்பு


*(Redemption fulfill through love)*

லூக்கா 1:40,41- இல் "அவர் (மரியாள்) செக்கரியாவின் வீட்டை அடைந்து எலிசபெத்தை வாழ்த்தினார்." "மரியாவின் வாழ்த்தை எலிசபெத்து கேட்டபொழுது அவர் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று."

உறவினர்களான மரியாள், எலிசபெத், மீட்பின் அனுபவமாகுதலை அன்பின் தன்மைகளினால் வெளிப்படுத்தினார்கள். அன்புக்கு ஏங்கும் உலகத்தில் வைக்கப்பட்டுள்ளோம். அன்பு, உறவு இவைகள் குடும்பங்களில், திருச்சபைகளில், வாழும் சூழலில் குறைந்து கொண்டே வருகிறது. அன்பற்ற சமூகம் உலகில் பரிணமித்துள்ளது, கிறிஸ்துவின் பிறப்பு அன்பை கட்டமைத்து மீட்பின் அனுபவத்தை மக்கள் உணர செய்கிறது. கிறிஸ்துவின் பிறப்பு உறவுகளைத் துளிர்விட செய்து, ஏற்றதாழ்வுகளை மறையச் செய்கிறது. கிறிஸ்து பிறப்பு பண்டிகை காலத்தில், அன்பும் உறவும் அன்றைய அருட்பணியாளர்கள் காலம் முதல், இன்று வரையிலும் செயலாக்கமுடன் வெளிப்படுத்தப்படுகிறது. குறிப்பாக,

நடைமுறையில் சாத்தியமான செயல்களை ஒவ்வொரு ஆண்டும் கடைபிடித்து வருகிறார்கள். பாரம்பரிய நோக்கில், கலாச்சாரப் பின்னணியில் நிறை குறைகள் உண்டு. ஆனால் அதன் நோக்கமும் அது வெளிப்படுத்தும் தன்மையும் ஆரோக்கியமானது.

கிறிஸ்து பிறப்பு பண்டிகையின் போது அச்சு முறுக்கு சுடும் பழக்கம் கிறிஸ்தவர்களின் சமூக வாழ்வியலில் காணப்படும் ஒன்று. தமிழில் 'அச்சு முறுக்கு' கேரளாவில் 'அச்சப்பம்,' கன்னடம், ஆந்திராவில் 'றோஸ்டுக்கில்' அல்லது 'குலாபி புல்லூ' என்ற வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டாலும், அதன் பாராம்பரிய சுவை சிறப்பானது என்கிறார் டானியா ஆபிரகாம் (Eating with History). (காலனி ஆதிக்கத்தின விளைவால் மைதா, உடலுக்கு ஊறுவிளைவிக்கும் செயற்கை நிறமூட்டிகளால் அலங்கரிக்கப்பட்ட கேக் போன்றவற்றை அதன் கெடுதி அறிந்தும் கிறிஸ்து பிறப்பு பண்டிகையின் போது பயன்படுத்துகிறோம்). அச்சு முறுக்கு, செய்வதற்கான உணவு பொருட்களை ஆயத்தம் செய்வது, அதை சமைப்பதற்கு எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் குடும்பங்களின் கூட்டு முயற்சி வெளிப்படும். அன்பு கலந்த உணவின் சுவை நாவில் நாட்டியமாடும். தாங்கள் மட்டுமல்ல பிறருக்கும் வெளிநாட்டிற்கும் அனுப்பி உண்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். பரிசுகள், உடைகள் வாங்கி ஒருவருக்கொருவர் பகிர்தல் சிறப்பானது. அதிலும் குறிப்பாக, சில பகுதிகளில் 'படி' கொடுக்கும் பழக்கம் அன்பின் அடுத்த



நகர்வாகும். திருமணமான புதுமணத் தம்பதிகள், தங்கள் முதல் கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடும் போது, மணமகளின் பெற்றோர், உடன் பிறந்தோர், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோர் ஒன்று சேர்ந்து, மணமகனின் வீட்டிற்கு சென்று வாழ்த்தி, உணவு, தங்க உடமை, (காய்கறிகள், இறைச்சி, பழங்கள், தின்பண்டங்கள், எண்ணெய்) அதற்கு மேல் தங்களால் இயன்ற அனைத்தும் கொடுத்துச் சிறப்பிப்பார்கள்.

இன்றும் கிறிஸ்தவ குடும்பங்களில் வயது மூத்தவர்களானாலும் வருடம் தோறும் 'கிறிஸ்மஸ் படி' கடைபிடித்து தங்கள் அன்பை வெளிப்படுத்தி வருகின்றவர்களும் உண்டு. அன்பு வாழ்கின்றவர்களுடன் மட்டுமல்ல, இறையழைப்பில் பிரவேசித்தவர்கள் நித்திய இளைப்பாற்றில் இருக்கின்றவர்களை நினைத்துப் பார்க்கவும், கிறிஸ்து பிறப்பு பண்டிகை காலத்தில் அவர்கள் நினைவிடங்களைச் (கல்லறைகளை) செப்பனிட்டு, அவர்களை நினைவு கூர்ந்து, பிறருக்கு உதவுவதும் மிக சிறந்த அன்பின் அனுபவங்களால் வெளிப்படும் மீட்பாகும்.

தற்போது பெரும் தொற்று மற்றும் இயற்கை பேரிடர் நிறைந்த காலங்களில். ஒருவருக்கொருவர், விருந்தோம்பல் இல்லாமல், புலம்பெயர்ந்து வாழும் மக்களைக் குறித்த சிந்தனை இல்லாமல் மனிதநேயமற்ற செயல்களினால், பிற சமய பற்றுதியுடன் வாழும் சமூகங்களில் உண்மையான கிறிஸ்துவின் அன்பு குறைந்து போகச் செய்கிறது. கிறிஸ்து பிறப்பு அர்த்தமுள்ளதாக, பொருள் உள்ளதாக மாறுவதற்கும், ஒவ்வொரு நாளும் கிறிஸ்து நம்மில் பிறப்பதற்கும், காரிருள் போன்ற கஷ்டங்களில் வாழ்பவர்கள் மகிழ்ச்சியைப் பெற்றுக்கொள்வதற்கும், அன்பின் செயல்களினால் மீட்பு அனுபவங்களாக்கப்படுவதற்கு இறைபற்றுள்ளவர்களாக நாம் செயல்படுவோம்.ஆமேன்.



சிறுகதை

# எங்க வீட்டுக்கு வாங்கய்யா

சிறுவன் ஒருவன் இருந்தான். படிப்பிலும், திறமையிலும் அவன் அவ்வளவாய் ஜொலிப்பதில்லை ஆனாலும், பள்ளியில் நடைபெறும் எல்லா நிகழ்விலும், தானும் பங்குபெற வேண்டும் என்கிற நல்ல ஆவல் அவனுக்கு உண்டு.

கிறிஸ்மஸ் காலம் நெருங்கியது கிறிஸ்மஸ் விழாவைச் சிறப்பாகக் கொண்டாட, சிறப்பு நிகழ்வுகளுக்கான பயிற்சியானது மாணவர்களுக்குத் துவங்கியது. கிறிஸ்து பிறப்பு நாடகம் நடிப்பதற்கு மாணவ மாணவிகள் தெரிந்தெடுக்கப்பட்டனர். இச்சிறுவனும் தனக்கும் நடிக்க ஒரு பாத்திரம் தருவார்கள் என்று அத்தெரிந்தெடுப்பில் கலந்துக் கொண்டிருந்தான். இச்சிறுவனைத் தவிர கலந்துக் கொண்ட அனைவரும் தெரிந்தெடுக்கப்பட்டனர். உனக்கு



நடிக்க வராது இது சாதாரண நிகழ்வு அல்ல, நம் நாட்டின் கல்வி அமைச்சர், பேராயர், அதிகாரிகள், பெற்றோர்கள் என அனைவரும் பங்கெடுக்கும் விழா. உனக்கு தந்தால் நீ சொதப்பி விடுவாய். உன் திறமைக்கு நீ மேடைக்கெல்லாம் வர விரும்பாதே என்று மூஞ்சில் அடித்தாற் போல் சொல்லி விரட்டினார்கள்.

விம்மி, விம்மி அழுதுகொண்டே வந்த மகனைப் பார்த்து தூக்கி அணைத்த தாய், காரணத்தைக் கேட்டு வருத்தமடைந்தவளாய், எப்படியாவது நான் உனக்கு நடிப்பதற்கு ஓர் வாய்ப்பு வாங்கி தரலாம் என வாக்குறுதிக் கொடுத்து அவன் அழுகையை நிறுத்தி உணவைக் கொடுத்தாள்.

மறுநாள், மகனோடு பள்ளிக்கூடத்திற்குச் சென்ற தாய் நாடகத்திற்குப் பொறுப்பான ஆசிரியரிடம் சென்று, ஐயா என் மகனுக்கும் ஒரு கதாபாத்திரம் கொடுங்க, நேற்று முழுவதும் அவன் அழுது முகமெல்லாம் வீங்கிவிட்டது. ப்ளீஸ் ஐயா என்று கெஞ்சிக் கேட்டாள்.

அது எல்லாம் முடியாதுமா, நாங்க சும்மா உங்கப் பையனைத் தெரிவு செய்யாமல் இருக்கிறோம் என நினைக்காதீர்கள். இதற்கு முந்தின நாடகத்தில் அவன் நடிப்புப் பள்ளிக்கூடம் முழுமைக்கே தெரியும். ஒழுங்கா நடிக்கவில்லை அது மட்டுமல்ல் சம்பந்தமில்லாமல் ஏதோதோ உளறி, அந்த நாடகத்தின் அழகையே கெடுத்தான். இப்படியிருக்க அவன் கேட்கிறான்னு நீங்களும் வந்துவிட்டீர்களே, என்ன தைரியத்தில் நான் கொடுக்க முடியும்? வாய்ப்பே இல்லை ... சென்றுவிடுங்கள் அவ்வளவு தான்.

ஐயா, அப்படி சொல்லாதீர்கள் நான் ஒரு பெரிய பாத்திரம் கேட்கவில்லை, ஏதாவது ஒரு சிறிய பாத்திரம் சும்மா ஓரமா நிற்பது போல இருந்தாலும் சரி ஐயா, தயவு செய்து முடியாதுன்னு சொல்லாதீங்க ஐயா, எவ்வளவு பாடுபட்டாவது நான் பயிற்சிக் கொடுக்கிறேன் ஐயா. இல்லன்னா இந்த



கிறிஸ்மஸ் என் மகனுக்கு இருள் போல மாறிவிடும் ஐயா என்று மன்றாடினாள்.

இறுதியில், தாயின் கெஞ்சுதலால், சத்திரத்தின் உடைமையாளராக நடிக்கும் பாத்திரம் அச்சிறுவனுக்குக் கொடுக்கப்பட்டது. மரியாளும், யோசேப்பும் சத்திரத்தில் இடமுண்டா? என்று கேட்கும் போது, அவன் இடமில்லை என்று சொல்ல வேண்டும். அவ்வளவு தான் அவனுடைய பாத்திரம்.

அந்நாளும் வந்தது. மேடைக்கு முன்புறம் கல்வி அமைச்சர், பேராயர், அதிகாரிகள், போதகர்கள் என அழைக்கப்பட்டவர்கள் திரளான கூட்டம் அமர்ந்திருந்தது. நாடகமும் இனிதே தொடங்கியது ஒவ்வொருவரும் அவரவர் பங்களிப்புகளைச் சிறப்பாக நடித்துக் கொண்டிருந்தனர். இப்போது நாடகத்தில் மரியாளும் யோசேப்பும், சத்திரம் தேடி அலைகின்றனர். இறுதியில் ஒரு சத்திரத்தைக் கண்டுபிடித்து, அதன் அருகில் செல்கின்றனர். அங்கு இச்சிறுவன் சத்திரத்தின் உடைமையாளர் தோற்றத்தில் அழகாக நிற்கின்றான். யோசேப்பு இச்சிறுவனை நோக்கி, ஐயா நாங்கள் பக்கத்து நாட்டுக்குப் பயணம் செய்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இப்போது என் மனைவிக்குப் பிரசவ வலி வந்து விட்டது. தயவு செய்து எனக்கு ஒரு அறை தாருங்க என்று கெஞ்சிக் கேட்டான் யோசேப்பு. அறை இல்லை என்று ஒற்றை வார்த்தையால் சொல்லி விட்டு, அமைதியாய் நின்றான்



சிறுவன். அவர்கள் கேட்கும் போது அறை இல்லை என்று நீ திரும்ப திரும்பச் சொன்னால் போதும் என்று ஏற்கனவே தாய் தெளிவாய் சொல்லிக் கொடுத்திருந்தாள்.

யோசேப்பு மீண்டும் கேட்க, இல்லை என்று பதில் சொன்னான் நாடகத்தின் உச்சக் கட்டத்தில் யோசேப்பும் மரியாளும், ஐயா தயவு செய்து ஒரு ஓரமாவது இடம் தாங்க ஐயா, அடிவயிறு வலிக்கிறது என்று மிகவும் அழுதபடி கெஞ்சிக் கெஞ்சிக் கேட்பார்கள். அப்படிக் கேட்ட பொழுது, திடீரென்று சிறுவன் கண்கலங்கி ஐயா இங்க தரக்கூடாதுன்னு சொல்லிருக்காங்க ஐயா, வேணும்னா எங்க வீட்டுக்கு வாங்கய்யா அங்க இடம் இருக்குய்யா.....நான் எங்க வீட்டுக்கு உங்கள கூட்டிட்டு போறேன்.....தழுதழுத்தக் குரலில் சொன்னான் சிறுவன்.

சம்பந்தமில்லாமல் பேசிய சிறுவனால், நாடகம் தோல்வியடைந்தது என்று எல்லாரும் சோர்ந்துப் போயிருந்த நேரத்தில், கல்வி அமைச்சர் எழும்பி மேடைக்கு வந்து, இச்சிறுவனைத் தூக்கி அணைத்து, கிறிஸ்மஸ் என்றால் என்னவென்று எனக்கே புரிய வைத்துவிட்டாய் என்று சொல்லி தனக்குக் கிடைத்த பரிசைச் சிறுவனுக்குக் கொடுத்து கடந்து சென்றார். ஆம்! கிறிஸ்மஸ் என்றால் கடந்த காலத்தின் நினைவுகள் அல்ல, நிகழ்காலத்தின் இரக்கமும், ஈகையுமே.

-எங்கேயோ கேட்டது

எழுத்தாக்கம்: மெர்லின், கண்ணனூர்.






# சிட்டுக் குருவியும் பச்சைக் கிளியும்

யோதா

(ஓர் ஓய்வு நாளின் காலை வேளையில் பூங்குன்று என்னும் இடத்தில் உள்ள ஆலயத்தின் நுழை வாயில் அருகேயுள்ள மா மரத்தில் மாம்பழம் உண்ண வந்த ஒரு சுறு சுறுப்பான சிட்டுக் குருவியும், ஓர் அழகிய பச்சைக் கிளியும் தங்களுக்குள் பேசுவதைக் கேட்போமா?)

**சிட்டுக் குருவி:** "அக்கா! அக்கா! கிளி அக்கா! அதோ பாருங்கள்! ஆலயத்துக்கு வருகிறவர்கள் எல்லாரும் எவ்வளவு அழகாக ஆடை உடுத்திக்கொண்டு வருகிறார்கள், பார்த்தீர்களா?"

**பச்சைக் கிளி:** "இதற்கே இவ்வளவு ஆச்சரியப்படுகிறாயே, இன்னும் சில நாட்கள் பொறு, கிறிஸ்துமஸ் வரட்டும், இவர்கள் எல்லாரும் எவ்வளவு விலை உயர்ந்த ஆடைகளை அணிந்துகொண்டு வரப்போகிறார்கள் பார்!"

**சிட்டுக் குருவி:** (துக்கத்துடன்) "நமக்குத்தான் ஒரு ஆடையும் கிடையாது. பிறந்த நாள் முதல் சாகும் வரை இப்படியே இருக்க வேண்டியதுதான். அக்கா! அக்கா! நாமும் இப்படி ஆடை தைத்துப் போட்டால் நன்றாக இருக்கும்

இல்லையா?”

**பச்சைக் கிளி:** “அட முட்டாள் குருவியே நமக்கு ஆடை அழகாகவே இருக்காது. நாம் இப்படியே இருப்பதுதான் நமக்கு அழகு. இப்படித்தான் ஆண்டவர் நம்மைப் படைத்திருக்கிறார்”

**சிட்டுக் குருவி:** “அப்படியானால் அவர்களுக்கு மட்டும் ஏன் ஆண்டவர் ஆடையைக் கொடுத்தார்?”

**பச்சைக் கிளி:** “அது ஒரு பெரிய கதை. ஆண்டவர் அவர்களைப் படைத்தபோது அவர்களுக்கும் ஆடை கிடையாது. நம்மைப் போல்தான் இருந்தார்கள்”

**சிட்டுக் குருவி:** “அய்யே! சின்னக் குழந்தைகளைப் போலவா?”

**பச்சைக் கிளி:** “ஆம்! கடவுள் படைத்தபோது அவர்களுக்குச் சிறு பிள்ளையைப் போன்ற களங்கமற்ற மனம் இருந்தது. எனவே ஆடை தேவைப்படவில்லை”

**சிட்டுக் குருவி:** “அப்படியானால் ஏன் பிறகு ஆடை அணிந்தார்கள்?”

**பச்சைக் கிளி:** “ஆண்டவர் அவர்களை உலகில் படைத்து, ஏதேன் என்னும் தோட்டத்தில் வைத்தபோது, ஒரு மரத்தின் கனியை மாத்திரம் உண்ணக் கூடாது என்று சொல்லியிருந்தார். அதை உண்ணும் நாளில் நீங்கள் சாவீர்கள் என்றும் சொல்லியிருந்தார்”



**சிட்டுக் குருவி:** (ஆச்சரியத்துடன்) "பிறகு என்ன நடந்தது?"

**பச்சைக் கிளி:** "அவர்கள் விலக்கப்பட்ட அந்த மரத்தின் கனியை உண்டு பாவம் செய்தார்கள், உடனே அவர்களுக்குள் களங்கம், வெட்கம், பயம் எல்லாம் வந்தது. ஆண்டவரைப் பார்க்கப் பயந்து ஓடி ஒழிந்தார்கள். பின்னர் ஆண்டவர் இரக்கமுற்று அவர்களுக்கு ஆடை கொடுத்தார். அதனால்தான் இப்போது ஆடையோடு வாழ்கிறார்கள்"

**சிட்டுக் குருவி:** "அப்படியா? பாவம் செய்ததால்தான் ஆடை வந்ததா?"

**பச்சைக் கிளி:** "ஆமாம்! அவர்கள் அணிந்திருக்கின்ற இந்த அழகழகான ஆடைகள் எல்லாமே அவர்களது பாவத்திற்கான மூடல்கள்தாம்! வக்கிரம் நிறைந்த அவர்களது மனங்களின் அடையாளங்கள்தாம் இந்த ஆடைகள்!"

**சிட்டுக் குருவி:** "அப்படியா? ஆண்டவர் அவர்களுக்கு மட்டும் ஆடை கொடுத்து, நமக்குத் தராமல் விட்டுவிட்டார் என்றல்லவா நான் நினைத்தேன். சரி! எனக்கு இன்னும் ஒரு சந்தேகம். ஆண்டவர் சொன்னதை மீறி பழத்தை உண்டபோது, ஆண்டவர் சொன்னதுபோல் ஏன் அவர்கள் சாகவில்லை?"

**பச்சைக் கிளி:** "சரியாகக் கேட்டாய்! இப்போது நீ பார்க்கிற மனிதர்கள் அனைவருமே, படைப்பின் போது கடவுள் கொடுத்திருந்த களங்கமற்ற பரிசுத்தச் சாயலுக்குச் செத்தவர்கள் தாம்"

**சிட்டுக் குருவி:** (சத்தமாகச் சிரித்தபடி) "ஓ! இவர்கள் சட்டை போட்ட செத்த மனிதர்கள் அப்படித்தானே?"

**பச்சைக் கிளி:** "இப்போது சொல் என் செல்லச் சிட்டே! உனக்கும் ஓர் ஆடை ஆண்டவரிடம் கேட்போமா?"

சிட்டுக் குருவி: "அக்கா! எனக்கு ஆடை வேண்டாம், வேண்டவே வேண்டாம்! நான் இப்படியே, ஆண்டவர் என்னைப் படைத்தது போலவே இருந்துவிட்டுப் போகிறேன்"

(என்று கூறித் தன் சின்னச் சிறகுகளைச் சிலுப்பிச் சிட்டாய்ப் பறந்து தூரத்தில் மறைந்தது அந்தச் சிட்டுக் குருவி)

## நாங்கள் உங்களிடத்தில் எதிர்பார்ப்பது

நீங்கள் இந்த பத்திரிகையால் ஆசீர்வதிக்கப்பட்டால்,
தயவு செய்து உங்கள் கிறிஸ்தவ நண்பர்களோடு
இதை பகிர்ந்து கொள்ளுங்கள்

மாதந்தோறும் இப்பத்திரிகையை நீங்கள் பதிவிறக்கம்
செய்ய விரும்பினால், +91 86680 47378 என்ற Whatsapp எண்ணுக்கு
<SEED MAG> என SMS அனுப்பவும்.

உங்களால் முடிந்தால் இந்த பத்திரிகையை கறுப்பு வெள்ளையில்
அச்சிட்டு electronics device இல்லாதவர்களுக்கு
படிக்க கொடுத்து உதவுங்கள்

உங்கள் படைப்புகளையும் அனுப்பலாம்.
தகுதியுள்ளவைகள் பிரசுரிக்கப்படும்.

இறை மக்கள் சிலருடைய பண உதவியினாலே
இந்த பத்திரிகையை எங்களால் வெளியிட முடிகிறது,
நீங்களும் நன்கொடை அளிக்க
கடவுளால் உந்தப்பட்டால் அனுப்பலாம்.
உற்சாகமிருந்தால் மட்டுமே, கட்டாயமல்ல

---

நன்கொடை அளிக்க விரும்புபவர்கள் கீழ்கண்ட
Bank account அல்லது Google pay வழியாகவும் அனுப்பலாம்

**Bank Account Details:**

S. Merlin
Acc. No.: 0480053000011726
IFSC: SIBL0000480
Bank: South Indian Bank
Branch: Marthandam

Google Pay ID:
+91 9486954577
merlin.kannanoor@okaxis

Edited and Published by S. Merlin,
16/76 Vettukattuvilai, Kannanoor -629158, Kanyakumari District, Tamilnadu, India